# In the Court of the District Munsif, Eraniel

**Original Suit No. 35/2025** **Date:29.04.2026.**

**(PW1)- ஜஸ்டின் ஜெபகுமார்**

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. வழக்கு பட்டிகை சொத்து 2 ஆம் பிரதிவாதி மற்றும் அவரது கணவரின் சொத்து என்றால் சரிதான். மேற்படி நபர்களுக்கு வாரிசுகள் உண்டா என்றால் குழந்தை பிறந்து இறந்துவிட்டது. 2 ஆம் பிரதிவாதியின் கணவர் உயிருடன் இருக்கிறாரா என்றால் இல்லை 20.01.2023 ல் இறந்துவிட்டார். எனவே 2 ஆம் பிரதிவாதி மட்டும் தான் அவரது கணவரின் ஒரே வாரிசு என்றால் சரிதான். எனவே 2 ஆம் பிரதிவாதியான எனது அக்கா மட்டுமே தாவா சொத்திற்கு முழு உரிமையாளர் என்றால் சரிதான். எனவே ஒருவருக்கு உரிமைப்பட்ட சொத்தை அவர் விருப்பப்படி உரிமை மாற்றம் செய்யலாம் என்றால் சரிதான், ஆனால் எனது அக்கா சுயநினைவு இல்லாமல் உள்ளார் எனவே அவர்எந்தவித ஆவணமும் எழுதிவைக்கும் சூழ்நிலையில் இல்லை.

2. எனது அக்காவிற்கு நான் வாரிசு ஆக முடியாது என்றால் சரிதான். நான் 1 ஆம் பிரதிவாதியிடம் மருத்துவ செலவிற்காக கொடுத்ததாக குறிப்பிடும் பணம் முழுவதையும் 1 ஆம் பிரதிவாதி அவர் வங்கி கணக்கு மூலம் எனக்கு திரும்ப செலுத்திவிட்டார் என்றால் சரியல்ல, இன்னும் திரும்ப பணம் கொடுக்கவேண்டிய உள்ளது. அவ்வாறு 1 ஆம் பிரதிவாதி எனக்கு பணம் திரும்ப செலுத்தவேண்டியது இருந்தால் நான் அவர் மீது தனியாக வழக்கு தாக்கல் செய்து பரிகாரம் தேடிக்கொள்ள வேண்டியது தவிர எனது அக்கா எழுதிவைத்த ஆவணத்தை பொறுத்த ரத்து உத்தரவு கேட்கமுடியாது என்றால் சரியல்ல.

3. நான் பிராதில் குறிப்பிட்டுள்ள ரூ. 520000/- தொகையை 1 ஆம் பிரதிவாதி 2 ஆம் வாதியின் மனைவிக்கு திரும்ப செலுத்திவிட்டார் என்றால் சரியல்ல. எனது

அக்காவான 2 ஆம் பிரதிவாதிக்கு வீரியமிக்க நோய்கள் இருந்தது என்றாலும் அதன் காரணமாக ஏற்பட்ட மருத்துவ செலவுகளை ஈடு செய்ய முடியாததால் தாவா சொத்தினை எனது அக்காவான இரண்டாம் பிரதிவாதி கிரயம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. எனது அக்கா எழுதிக்கொடுத்த அதிகார ஆவணத்தையும் மருத்துவரின் அறிவுரையின் படி தொலை தூரம் பயணம் செய்ய கூடாது என்பதால் அருகில் உள்ள சார் பதிவாளர் அலுவலகத்திலேயே பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல, எனது அப்பா சுயநினைவில் இல்லை.

4. எனது அக்கா சுயநினைவில் இல்லாத காரணத்தினால் ஆவணம் எழுதிக்கொடுத்திருந்தாலும் அதை ரத்து செய்து கேட்க உரிமை கிடையாது என்றால் சரியல்ல. எனது அக்கா சுயநினைவில் தான் இருந்தார் என்றாலும் முறையாக சார் பதிவாளர் அலுவலகத்தில் நேரில் சென்று சார் பதிவாளர் கேட்ட கேள்விகளுக்கு பதில் அளித்து அதன் பின்னரே முறையாக பதிவு செய்யப்பட்டது என்றால் அவ்வாறுறே இருந்தாலும் எனது அக்கா கையெழுத்திடுவார் ஆனால் மேற்படி ஆவணத்தில் கைரேகை போடப்பட்டுள்ளது. எனது அக்கா மூளையில் ரத்த கசிவினால் பாதிக்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான்.

5. மேற்படி பாதிப்பினால் எனது அக்காவால் கையெழுத்து போடமுடியாமல் சார் பதிவாளர் அனுமதியோடு கைரேகை வைத்துள்ளார் என்றால் சரியல்ல. 1,3 பிரதிவாதிகளின் குடும்பத்தினரால் ஏற்படுத்தப்பட்ட மோசடி ஆவணம் ஆகும். மேற்படி மோசடி ஆவணம் தொடர்பாக நான் இரணியல் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் புகார் கொடுத்தேன். மேற்படி புகார் சம்பந்தமான ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி புகாரின் விசாரணையில் எனது அக்கா நேரில் ஆஜரானார் என்றாலும் மேற்படி விசாரணையில் காவல் துறையினர் நீதிமன்றம் மூலம் பரிகாரம் தேடிக்கொள்ள

அறிவுறுத்தினார்கள் என்றாலும் சரியல்ல. எனது அக்கா நல்ல சுயநினைவில் தான் அனைத்து ஆவணங்களையும் எழுதிக்கொடுத்தார் என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து எனக்கோ எனது பெற்றோருக்கோ எந்தவித உரிமையும் இல்லை என்றாலும் எனவே நான் கோரியுள்ள பரிகாரங்கள் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

(ஒப்பம்)

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**இரணியல்.**